***நெஸ்லே லங்கா நிறுவனம் 2016 ஆண்டிற்கான சுவர்ணதீப தங்க விருதை வென்றுள்ளது***

*பாலுற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டும் என்ற இலங்கையின் இலட்சியத்திற்கு உதவும் வகையில் ஆற்றியுள்ள கணிசமான பங்களிப்பிற்காக இனங்காணல் அங்கீகாரத்தைச் சம்பாதித்துள்ளது*

பாலுற்பத்தியில் தன்னிறைவு காண வேண்டும் என்ற இலங்கையின் இலட்சியத்திற்கு உதவும் வகையில் நெஸ்லே லங்கா நிறுவனம் ஆற்றியுள்ள கணிசமான பங்களிப்புக்களுக்காக அதற்கு 2016 ஆம் ஆண்டிற்கான *சுவர்ணதீப தங்க விருது* வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு பாலுற்பத்தித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதில் நெஸ்லே லங்கா நிறுவனம் ஆற்றி வருகின்ற தீவிரமான பங்களிப்பினைப் போற்றும் வகையில், இனங்காணல் அங்கீகாரச் சின்னமாக 2016 ஆண்டிற்கான *சுவர்ணதீப தங்க விருது* அமைந்துள்ளது. இலங்கையில் தனியார் துறை மத்தியில் மிக அதிகளவில் புத்தம்புதிய பாலைக் கொள்வனவு செய்து வருகின்ற நிறுவனமாக நெஸ்லே லங்கா திகழ்ந்து வருகின்றது. *நெஸ்பிரே*, *மைலோ* மற்றும் *மில்க்மெயிட்* போன்ற தனது உற்பத்திகளைத் தயாரிப்பதற்காக புத்தம்புதிய பாலைக் கொள்வனவு செய்துள்ளதன் மூலமாக, 2015 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 20,000 உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுக்கு ரூபா 3.6 பில்லியன் தொகையைப் பங்களித்துள்ளது. கடந்த காலங்களில் பல்வேறு பால் சேகரிப்பு மையங்கள் மற்றும் பால் குளிரூட்டல் மையங்களையும் நிறுவனம் ஸ்தாபித்துள்ளது. அண்மையில் வட பிராந்தியத்திலுள்ள உரும்பிராயில், அப்பிரதேசத்திலுள்ள பாற்பண்ணையாளர் சமூகத்தினை வலுவூட்டும் வகையில் புதிய பால் குளிரூட்டல் நிலையமொன்றை ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

*‘‘உள்நாட்டில் புத்தம்புதிய பாலுற்பத்தியை அதிகரித்து, அதன் மூலமாக பாலுற்பத்தியில் தன்னிறைவு காண வேண்டும் என்ற இலட்சியத்தை இலங்கை அடைந்துகொள்வதில் உதவும் எமது முயற்சிகளுக்கு கிடைக்கப்பெற்ற இனங்காணல் அங்கீகாரமாக, இந்த விருதைப் பெற்றுள்ளமையையிட்டு மிகவும் கௌரவம் அடைந்துள்ளோம். நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் நாம் வழங்கியிருந்த உறுதிமொழிக்கு அமைவாக, உள்நாட்டில் புத்தம்புதிய பாலைக் கொள்வனவு செய்து, எமது உற்பத்திகளை உள்நாட்டில் தயாரிக்கும் முயற்சிகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம்’’* என்று நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் குறிப்பிட்டார்.

*‘‘எமது முயற்சிகளைப் போற்றும் வகையில் வழங்கப்பட்ட இவ்விருதானது, இலங்கை மக்களுக்கு நிலையான வருமானத்தை ஈட்டுவதற்கான வாய்ப்பினை வழங்கி, அதியுயர் தரத்துடன் உள்நாட்டில் பெறப்படுகின்ற புத்தம்புதிய பாலை மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் மூலமாக போசணையை வழங்கி, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி, அதன் மூலமாக சிறந்ததொரு மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற எமது இலக்கினை மீளவும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.’’* என்று அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

சுதந்திர இலங்கை மக்கள் தொடர்பாடல் நிறுவனங்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற சுவர்ணதீப விருதுகள், ‘நாட்டின் நலனுக்கு பங்களிப்பாற்றியுள்ள’ தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களைக் கௌரவிக்கும் வகையில் வழங்கப்பட்டு வருகின்றன.